

சென்னை, ஏழுகிணறு, குளோப் திருமண மண்டபத்தில் நேற்று (3.11.2024) சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி கிழக்கு, மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் பாகநிலை முகவர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் இரா.நரேந்திரன், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, எம்.விஜயகுமார், ப. ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.இசட்.ஆசாத், எம்.இ.கனி, இரா.கலைச்செல்வி, ராஜேஷ் ஜெயின், நவின் தாஹா, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதிப்குமார், எம்.விநாயகம், கே.ஆர்.அபரஞ்சி, மே.ஜனார்த்தனன், மா.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியா, செ.தமிழ்வாணன், வெ.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், வட்ட கழக செயலாளர்கள் எம்.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா கதிரவன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன்,எல்.சத்யநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம் பரத்குமார் ,கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், லண்டன் க.முருகன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### கேரள மாநிலம் – பாலக்காடு – ஷோரனூர் அருகில் இரயில் மோதிய விபத்து: உயிரிழந்த

# சேலம் மாவட்ட துப்புரவுப் பணியாளர்கள் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ.4-**

**கேரள மாநிலம், பாலக்காடு, ஷோரனூர் அருகில் கேரளா எக்ஸ்பிரஸ் இரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த துப்புரவுப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

கேரளா மாநிலம், பாலக்காடு, ஷோரனூர், பாரதப்புழா பாலம் அருகில் நேற்று (02.11.2024) பிற்பகல் கேரளா எக்ஸ்பிரஸ் இரயில் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் இரயில் பாதையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஆச்சாங்குட்டப்பட்டி, அடிமலை புதூர் கிராமத்தைச் சேர்ந்த லட்சுமணன் (வயது 55) (த/பெ.அண்ணாமலை), திருமதி.வள்ளி (வயது 45) (க/பெ.லட்சுமணன்), காரைக்காடு, டி.பெருமாள் பாளையத்தைச் சேர்ந்த லட்சுமணன் (வயது 45) (த/பெ.ராமசாமி), மற்றும் அல்லிக்குட்டையைச் சேர்ந்த திருமதி.ராஜம்மாள் (வயது 43) (த/பெ.வீரன்) ஆகிய நால்வரும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சராக இரா. ராஜேந்திரன் பதவியேற்றதை முன்னிட்டு அயலக தி.மு.க. பஹ்ரைன் நிர்வாகி சசிகுமார், எம்.காளிப்பட்டி கழக முன்னோடி மணி (எ ) பரமசிவம் ஆகியோர், அமைச்சரை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்!

# அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## தலைமை : ஜோசப் சாமுவேல்! முன்னிலை: டி.எஸ்.பி.ராஜகோபால்!

சென்னை, நவ.4-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் 02.11.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அம்பத்தூர் எஸ்டேட் டெலிபோன் எக்ஸ்சேஞ் அருகில் உள்ள பி.எஸ்.பி கன்வென்ஷன் மஹாலில் (PSB CONVENTION MAHAL) அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்குப் பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் தலைமையில், தெற்கு பகுதி செயலாளர், மாமன்ற ஆளுங்கட்சி துணை தலைவருமான டி.எஸ்.பி.இராஜகோபால். முன்னிலையில் நடைபெற்றது.

இதில் இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

மேலும் இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான பி.முனியாண்டி, அம்பத்தூர் 7வது மண்டலகுழு தலைவர் பி.கே.மூர்த்தி, ஜி.சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எப்.மோகன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி, ஜீ.வி.நாகவள்ளி எம்.சி, து. ஆயிரம், கு.கிருஷ்ண மூர்த்தி, ஜெ.பாலமுருகன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் க. பொற்கொடி எம்.சி, எஸ். உமா எம்.சி, உஷாநாகராஜ் எம்.சி, எம்.இ. சேகர் எம்.சி,

மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு, அ.செல்வம், க.கதீஜா மா.ரமேஷ், நடராஜன், செல்வராஜ், கதிரவன் து.ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன் பா.பொற்செழியன், ராமு, நடராஜன் து. செல்வராஜ், கவிதாசெல்லதுரை, சங்கர் ஆகியோர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா வெ.இராதாகிருஷ்ணன், மு.இரகு த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, பிரகாஷ் குமார் சீனிவாசன், எம்.இ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், டீக்கா, சண்முகம், சுந்தர்ராஜன் லோகநாதன் மோகன்குமார் விஜயகுமார் த.வ.லால் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி பொன்.நவராஜ்ரவி க.ஜீவா எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி ஆ.இரா,அருண் குப்புசாமி, சேதுராமன் பாஷ்கரன், சுரேஸ்பாபு, ஜெயராமன், மதியழகன், சவரிமுத்து, ராஜ்குமார் கோதண்டன், இன்பசேகரன் மற்றும் பாக முகவர்கள் கலந்துக் கொண்டார்கள்.

அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் நன்றியுரை வழங்கினார்.

# அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!



அரியலூர், நவ. 4-

அரியலூர் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 6.11.2024 புதன் கிழமை காலை 10.30 மணியளவில் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் முனைவர் சபாபதி மோகன், திருமதி கலா சுந்தரமூர்த்தி, ஏ.கே.அருண் கலந்துகொள்கிறார்கள்

அதுசமயம் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகி கள், மற்றும் கழக நிர்வாகி கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழகத் தலைவர் அவர்கள் வருகை.

2.தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுகம்.

3. வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்.

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

